# காலிங்கராயனுக்கு சிலை: முதல்வர் அறிவிப்பு

*சென்னை, செப். 19:* கொங்கு மண்டலம் பாசனம் பெற வழிவகுத்த காலிங்கராயனுக்கு சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். மேலும், அவரது பெயரிலுள்ள அணைக்கட்டுப் பகுதி சுற்றுலாத் தலமாகவும் மாற்றப்படும் என அவர் அறிவித்தார்.

(விரிவான செய்தி உள்ளே)

காலிங்கராயனுக்கு உருவச்சிலை:

# முதல்வர் அறிவிப்புக்கு விவசாயிகள் வரவேற்பு



வளைந்து நெளிந்து செல்லும் காலிங்கராயன் வாய்க்கால்.



காலிங்கராயன் அணைக்கட்டு.

***பவானி, செப்.19:*** பவானி ஆற்றைத் தடுத்து அணை நாசுவம்பாளையம் பகுதியில் அணை கட்டிய தோடு, 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் வாய்க்கால் வெட்டிய காலிங்கராயனுக்குச் சிலை யும், அணைக்கட்டு பகுதி சுற்றுலாத் தலமாகவும் மாற்றப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு விவசாயிகள், பொதுமக்கள் வரவேற்புத் தெரிவித் துள்ளனர்.

காவிரியின் கிளை நதியான பவானி ஆற்றில் அணை நாசுவம்பாளையம் பகுதியில் 750 ஆண் டுகளுக்கு முன் அணை கட்டியதோடு, ஈரோடு மாவட்டத்தில் 15,743 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் காலிங்கராயன் என்ற மன் னரால் வாய்க்காலும் வெட்டப்பட்டது. விவசாயி களுக்குப் பயனளிக்கும் அணை மற்றும் கால்வாய் வெட்டிய காலிங்கராயனுக்குச் சிலை அமைக்க வேண்டும், காலிங்கராயன் அணைக்கட்டை சுற் றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென பொது மக்கள் தரப்பில் நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இதைத் தொடர்ந்து, அணை நாசுவம்பாளையம் பகுதியில் காலிங்கராயனுக்குச் சிலையும், அணைக் கட்டுப் பகுதி சுற்றுலாத் தலமாகவும் அமைக்கப்ப டும் என முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை அறிவித்தார். இதையடுத்து, அணைகட்டுப் பகு தியில் ஈரோடு துணைமேயர் கே.சி.பழனிசாமி தலைமையில் பட்டாசு வெடித்தும்; இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

**கொமதேக நன்றி:** ஈரோடு மாவட்டம், அணை நாசுவம்பாளையம் பகுதியில் காலிங்கராயன் சிலை அமைக்க உத்தரவிட்ட தமிழக முதல் வருக்கு, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலர் ஈ.ஆர்.ஈஸ்வரன் நன்றி தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி: காலிங்கராயன் வாய்க் கால் ஈரோட்டின் அதிசயங்களுள் ஒன்று. கொங் குநாட்டு மக்களின் தேவையை உணர்ந்து, புன் செய் நிலங்களை எல்லாம் நன்செய் நிலங்களாக மாற்றத் திட்டமிட்டு, வாய்க்காலை வெட்டி, நதி நீர் இணைப்பிற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன் னரே வித்திட்டவர் காலிங்கராயன்.

காலிங்கராயருக்கு சிலை வைக்க வேண்டும் என்று பல்லாண்டுகளாக கோரிக்கை விடுக்கப் பட்டு வந்தது. அதை நிறைவேற்றும் வகையில், தமிழக முதல்வரின் அறிவிப்பு அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது என்று குறிப்பிட் டுள்ளார்.